**ஒதுக்கீட்டுத் தலைப்பு 127 – தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சு மற்றும் அவ்வமைச்சின் கீழான திணைக்களங்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2012 ஆம் ஆண்டு**

## 1 ஆம் பகுதி

**தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சின் கீழான திணைக்களங்களது கணக்குகள் தொடர்பான பொழிப்பறிக்கை**

### 1. அமைச்சின் கீழான திணைக்களம்

| செலவினத் தலைப்பு | திணைக்களத்தின் பெயர் |
|---|---|
| 221 | தொழில் திணைக்களம் |

### 2. கணக்குகள்

### 2.1 ஒதுக்கீட்டுத் தலைப்பு

### (அ) மொத்த நிதியேற்பாடும் செலவினமும்

அமைச்சிற்கும் அமைச்சின் கீழான திணைக்களத்திற்குமான மொத்த தேறிய நிதியேற்பாடு ரூபா 1,551,772,000 ஆனதுடன் அதில் மீளாய்வாண்டு முடிவில் ரூபா 1,417,840,528 பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கமைய, அமைச்சினதும் திணைக்களத்தினதும் தேறிய நிதியேற்பாட்டில் சேமிப்பு ரூபா 47,567,122 முதல் ரூபா 86,364,350 வரை, அதாவது, மொத்த தேறிய நிதியேற்பாட்டில் 3 சதவீதம் முதல் 5.5 சதவீதம் வரையில் அமைந்திருந்தது. விபரம் கீழே காணப்படுகின்றது.

| ஒதுக்கீட்டுத் தலைப்பு | அமைச்சு/ திணைக்களம் | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தேறிய நிதியேற்பாடு | | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பயன்பாடு | | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சேமிப்பு | |
|---|---|---|---|---|---|---|---|
| | | மீண்டுவருவன | மூலதனம் | மீண்டுவருவன | மூலதனம் | மீண்டுவருவன | மூலதனம் |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 127 | தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சு | 161,535,000 | 50,465,000 | 135,056,482 | 29,376,396 | 26,478,518 | 21,088,604 |
| 221 | தொழில் திணைக்களம் | 967,407,000 | 372,365,000 | 953,894,760 | 299,512,890 | 13,512,240 | 72,852,110 |
| | மொத்தம் | 1,128,942,000 | 422,830,000 | 1,088,951,242 | 328,889,286 | 39,990,758 | 93,940,714 |

## 2.2 முற்பணக் கணக்குகள்

### 2.2.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்

**பாராளுமன்றம் அனுமதிக்கப்பட்ட எல்லைகள்**

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழான திணைக்களத்திற்கு அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகளின் பொருட்டுப் பாராளுமன்றம் அனுமதித்த கீழே குறிப்பிடப்பட்ட எல்லைகள் கடைப்பிடிக்கப்பட்டுள்ளன. விபரம் கீழே காணப்படுகின்றது.

| தலைப்பு | விடய இலக்கம் | செலவினம் | | பெறுவனவு | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|---|---|
| | | அதிகூடிய எல்லை | உள்ளபடியானது | அதிகுறைந்த எல்லை | உள்ளபடியானது | அதிகூடிய எல்லை | உள்ளபடியானது |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 127 | 12701 | 7,000,000 | 3,753,917 | 2,000,000 | 2,533,589 | 90,000,000 | 15,273,675 |
| 221 | 22101 | 90,000,000 | 76,116,498 | 47,000,000 | 54,903,539 | 246,000,000 | 228,244,606 |

## 2.3 கட்டு நிதி மற்றும் பொது வைப்புக் கணக்குகள்

### (அ) கட்டுநிதிக் கணக்கு

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழான திணைக்களத்தின் 2012 டிசெம்பர் 31 இல் உள்ளவாறானகட்டுநிதிக் கணக்குகளில் ரூபா 3,613,707 வரவு மீதியிருந்தது. விபரம் கீழே காணப்படுகின்றது.

| அமைச்சு / திணைக்களம் | 2012 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான வரவு மீதி |
|---|---|
| | ரூபா |
| தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சு | 196,757 |
| தொழில் திணைக்களம் | 3,416,950 |
| மொத்தம் | 3,613,707 |

### (ஆ) பொது வைப்புக் கணக்குகள்

2012 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான அமைச்சு மற்றும் அமைச்சின் கீழான திணைக்களத்தின் பொது வைப்புக் கணக்கு மீதிகள் ரூபா 1,820,173,563 ஆகும். இது தொடர்பான விபரம் கிழே காணப்படுகின்றது.

| அமைச்சு/ திணைக்களம் | கணக்கு இலக்கம் | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|---|
| | | ரூபா |
| தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சு | 6000/0000/00/0015/0040/000 | 6,642,502 |
| | 6000/0000/00/0015/0175/000 | 15,775,380 |
| தொழில் திணைக்களம் | 6000-0-0-15-102 | 1,791,496,284 |
| | 6000-0-0-3-35 | 5,948,102 |
| | 6000-0-0-6-29 | 311,295 |
| மொத்தம் | | 1,820,173,563 |

## II ஆம் பகுதி

**ஒவ்வொரு ஒதுக்கீட்டுத் தலைப்பிற்குமான விரிவான அறிக்கை**

### 1. ஒதுக்கீட்டுத் தலைப்பு 127 – தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சு

### 1.1 கணக்காய்வின் நோக்கெல்லை

தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சின் 2012 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், கணக்கிணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டது. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2013 செப்டம்பர் 04 ஆந் திகதியன்று அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் கணக்கிணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புரைகள், கருத்துரைகளும் கண்டுபிடிப்புகளும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் கணக்கிணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு மற்றும் கொடுக்கல் வாங்கல்களது மாதிரிச் செவ்வையின் அடிப்படையில் அமைந்தனவாகும். அம் மீளாய்வினதும் பரிசீலனையினதும் நோக்கெல்லையும் அளவும் எனக்குக் கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர், ஏனைய வளங்கள் நேரம் எனும் வரையறைக்குட்பட இயன்றளவு விரிவான கணக்காய்வை மேற்கொள்ளும் விதத்தில் தயாரிக்கப்பட்டனவாகும்.

### 1.2 கணக்குகள் மற்றும் கணக்கிணக்கக் கூற்றுக்கள் தொடர்பான பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்கு, கணக்கிணக்கக் கூற்று என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148/149/150/152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கேற்ப பேணப்படுதல், தயாரிக்கப்படுதல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பிக்கப்படுதல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரது பொறுப்பாகும். மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய பொருட்படுத்தக்கூடிய தவறான கூற்றுக்களற்ற கணக்குகள் மற்றும் கணக்கீட்டுக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் அவற்றை நியாயபூர்வமாகச்

சமர்பித்தலுக்கான உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தயாரித்தல், அமுலாக்குதல், பேணுதல் யாவும் இப்பொறுப்பில் உள்ளடங்கும்.

### 1.3 கணக்காய்வு அவதானிப்புகள்

2012 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கை மற்றும் ஏடுகள் என்பவற்றின் பிரகாரம் தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சின் ஒதுக்கீட்டுக் கணக்கு, கணக்கிணக்கக் கூற்று, இங்கு (அ) முதல் (இ) வரையிலான பொது அவதானிப்புகள் மற்றும் கீழே 1:4 முதல் 1:7 வரையிலான பந்திகளில் குறிப்பிடப்படும் பிரதான கணக்காய்வுக் கண்டுபிடிப்புகள் நீங்கலாக திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளதென அவதானிக்கப்பட்டது.

(அ) பதிவேடுகளையும் ஏடுகளையும் பேணாமை

(i) அமைச்சு பின்வரும் பதிவேடுகளைப் பேணவில்லை. சில பதிவேடுகள் முறையாகவும் நாளது வரையாக்கப்பட்டும் பேணப்படவில்லை என தெரிவுச் செவ்வைகளின்போது அவதானிக்கப்பட்டது.

| பதிவேட்டு வகை | தொடர்புடைய பிரமாணம் |
|---|---|
| இழப்பு மற்றும் நட்டப் பதிவேடு | நிதிப் பிரமாணம் 110 |
| நிலையான சொத்து பதிவேடு | 1978 டிசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்கத் திறைசேரிச் சுற்றறிக்கை |
| கணனித் துணைப்பாகங்கள் மற்றும் மென் அணிப் பதிவேடு | 2002 நவெம்பர் 28 ஆந் திகதிய IAI/2002/02 ஆம் இலக்கத் திறைசேரிச் சுற்றறிக்கை. |

(ii) அமைச்சிற்குரிய 20 வாகனங்களது நாளாந்த ஓட்ட அட்டவணைகள் மற்றும் மாதாந்தப் பொழிப்புக் குறிப்பு என்பன அமைச்சினால் சமர்ப்பிக்கப்படவிலிலை.

(ஆ) வரவு, செலவுத் திட்ட வேறுபாடு

இருபத்தொன்பது செலவின விடயங்களுக்கு அதிக ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டமையால் ஏற்பாடு செய்யப்பட்ட நிதி பயன்படுத்தப்பட்டதன்

பின்னரான மிகுதி அச்செலவின விடயங்களுக்குரிய தேறிய ஏற்பாட்டில் 30 முதல் 97 சதவீதம் வரையிலாக அமைந்திருந்தது.

(இ) பொது வைப்புக் கணக்கு

இரண்டு ஆண்டுகளைக் கடந்த ரூபா 1,044,800 வைப்பு சம்பந்தமாக நிதிப்பிரமாணம் 571 க்கமைய நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

## 1.4 கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 1.4.1 கூட்டிணைந்த திட்டம்

சகல அமைச்சுகளதும் செயலாளர்கள், மாகாண சபைப் பிரதான செயலாளர்கள் திணைக்களத் தலைவர்கள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனத் தலைவர்கள் என்பவர்களுடன் தொடர்புபடுத்தப்பட்ட 2010 மார்ச் 10 ஆந் திகதிய பீஎப்/ஆர்/2/2/3/5(4) ஆம் இலக்க பொது நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்திற்கமைய, 2010 ஆம் ஆண்டு தொடக்கம் அடுத்துவரும் 3 ஆண்டுகளுக்கான கூட்டிணைந்த திட்டம் ஆண்டின் ஆரம்பத்தில் அமைச்சினால் தயாரிக்கப்பட வேண்டியபோதிலும், அத்திட்டம் 2012 டிசெம்பர் 31 ஆந் திகதியளவிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.4.2 வருடாந்த செயற்திறன் அறிக்கை

மேற்படி 1.4.1 இல் குறிப்பிடப்பட்ட பொது நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தில் குறிப்பிடப்பட்ட 2002 செப்டம்பர் 12 மற்றும் 2004 பெப்ரவரி 20 ஆந் திகதிய 402 மற்றும் 402(1) ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கைகளின் பிரகாரம் நிதியாண்டு முடிவுற்று 150 நாட்களுக்குள் அமைச்சினால் தயாரிக்கப்பட வேண்டிய வருடாந்த செயற்திறன் அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கான பிரதியுடன் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட வேண்டுமாயினும், மீளாய்வாண்டிற்கான செயற்திறன் அறிக்கை 2013 ஆகஸ்ட் 31 ஆந் திகதியளவிலும் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படவில்லை.

### 1.4.3 வருடாந்த கொள்வனவுத் திட்டம்

அமைச்சினால் 2012 ஆம் ஆண்டிற்கான கொள்வனவுத் திட்டம் தயாரிக்கப்பட்டபோதும், அதனைத் தயாரிப்பதற்கு அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 4.2.1(இ),(ஈ)

மற்றும் (உ) பந்திகளில் காணப்படும் ஏற்பாடுகள் கடைப்பிடிக்கப்படாததுடன், கொள்வனவுக் கைநூலில் காணப்படும் மாதிரிப் படிவமும் பயன்படுத்தப்படவில்லை. 2012 ஆம் ஆண்டின் கொள்வனவுத் திட்டம் கணக்காய்விற்குச் 2013 ஆகஸ்ட் 12 ஆந் திகதியன்றுதான் சமர்ப்பிக்கப்பட்டது.

## 1.5 சொத்து முகாமைத்துவம்

### (அ) வருடாந்தப் பொருட் கணிப்பை நடாத்துதல்

பின்வரும் அவதானிப்புரைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

2010 டிசெம்பர் 17 ஆந் திபதிய பீஎப்/பொருட் கணிப்பு/01 ஆம் இலக்க பொது நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் மூலம் திருத்தப்பட்டவாறான 2009 டிசெம்பர் 09 ஆந் திகதிய 441 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்தப் பொருட் கணிப்பு 2013 மார்ச் 31 க்கு முன்னர் பூர்த்தியாக்கப்பட்டு அவ்வறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமாயினும், அவ்வறிக்கை 2013 ஜுன் 10 ஆந் திகதியிலேயே சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) தீர்த்து வைக்கப்படாத பொறுப்புகள்

அமைச்சினால் 2012 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு ஓராண்டிற்குக் குறைந்த தீர்த்து வைக்கப்படாத பொறுப்பு ரூபா 3,636,740 ஆகும்.

நிதிப்பிரமாணம் 94(1) க்கமைய, நிதியாண்டின்போது நிதியேற்பாடு இருந்தால் மாத்திரமே செலவினக் கடப்பாடுக்குள்ளாகலாம். எனினும், 07 செலவின விடயங்களுக்கு ரூபா 974,572 க்கு அதிகமாகச் செலவினக் கடப்பாட்டுக்குள்ளாகியிருந்தது. ஆண்டின்போது இப்பொறுப்பைச் செலுத்த வேண்டியேற்படின் அச்செலவினம் மிகையாகலாம் என அவதானிக்கப்பட்டது.

## 1.6 செயற்திறன்

2012 செயல் நடவடிக்கைத் திட்டம் மற்றும் முன்னேற்ற அறிக்கைகளின் பிரகாரம் அமைச்சின் முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புரைகள் கீழே காணப்படுகின்றன.

(அ) போதியளவு நிறைவேறாத பணிகள்

அமைச்சின் பிரதான பணிகள் போதியளவு நிறைவேறாதிருந்தன. அவ்வாறாக சில சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

- முன்னேற்ற அறிக்கைகளின் பிரகாரம் சிரம வாசனா நிதியத்தின் 05 தொழிற்பாடுகள் தொடர்பாக இலக்கிடப்பட்ட நிதி ரூபா 10.8 மில்லியன் ஆகும். நிதிசார் முன்னேற்றம் ரூபா 2.55 மில்லியன் ஆகும். இதற்கமைய, ரூபா 8.25 மில்லியன் அதிகமாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்திற்கு அமையச் செயற்படாமை

பின்வரும் சந்தர்ப்பங்களில் செயல் நடவடிக்கைகத் திட்டத்திற்கமைய செயற்படாமை அவதானிக்கப்பட்டது.

- நிதிசார் பெறுமதியின்றி மீளாய்வு செய்யப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்ட செயற்பாடுகள் முன்னேற்ற அறிக்கைகளில் நீக்கப்பட்ட 4 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

- முன்னேற்ற அறிக்கைகளின் பிரகாரம், 2 சந்தர்ப்பங்களில் ரூபா 1.68 மில்லியன் செலவில் நடைபெற்ற நடவடிக்கைகள் திருத்தப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டத்திற்குப் புறம்பாக நடைபெற்றிருந்தன.

- மீளாய்வு செய்யப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டம் மற்றும் முன்னேற்ற அறிக்கைகளில் காணப்படும் பௌதீக இலக்குகளுக்கிடையே 3 சந்தர்ப்பங்களில் வேறுபாடுகள் நிலவின.

## 1.7 மனிதவள முகாமைத்துவம்

### (அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு.

| | ஊழியர் வகையறா | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | உள்ளபடியான பதவியணி | வெற்றிட எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேட்ட மட்டம் | 13 | 12 | 01 |
| (ii) | மூன்றாம் நிலை மட்டம் | 5 | 4 | 1 |
| (iii) | இரண்டாம் நிலை மட்டம் | 44 | 38 | 6 |
| (iv) | ஆரம்ப மட்டம் | 31 | 25 | 6 |
| | மொத்தம் | 93 | 79 | 14 |

மீளாய்வாண்டு முடிவிலான 14 வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. ஒதுக்கீட்டுத் தலைப்பு 221 – தொழில் திணைக்களம்

### 2.1 கணக்காய்வின் நோக்கெல்லை

தொழில் திணைக்களத்தின் அமைச்சின் 2012 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், கணக்கிணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டது. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2013 ஆகஸ்ட் 22 ஆந் திகதியன்று திணைக்களத் தலைவருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் கணக்கிணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புரைகள், கருத்துரைகளும் கண்டுபிடிப்புகளும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் கணக்கிணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு மற்றும் கொடுக்கல் வாங்கல்களது மாதிரிச் செவ்வையின் அடிப்படையில் அமைந்தனவாகும். அம் மீளாய்வினதும் பரிசீலனையினதும் நோக்கெல்லையும் அளவும் எனக்குக் கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர், ஏனைய வளங்கள் நேரம் எனும் வரையறைக்குட்பட இயன்றளவு விரிவான கணக்காய்வை மேற்கொள்ளும் விதத்தில் தயாரிக்கப்பட்டனவாகும்.

## 2.2 கணக்குகள் மற்றும் கணக்கிணக்கக் கூற்றுக்கள் தொடர்பான பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்கு, கணக்கிணக்கக் கூற்று என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148,149,150,152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கேற்ப பேணப்படுதல், தயாரிக்கப்படுதல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பிக்கப்படுதல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரது பொறுப்பாகும். மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய பொருட்படுத்தக்கூடிய தவறான கூற்றுக்களற்ற கணக்குகள் மற்றும் கணக்கீட்டுக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் அவற்றை நியாயபூர்வமாகச் சமர்பித்தலுக்கான உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தயாரித்தல், அமுலாக்குதல், பேணுதல் யாவும் இப்பொறுப்பில் உள்ளடங்கும்.

## 2.3 கணக்காய்வு அவதானிப்புகள்

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கை மற்றும் ஏடுகள் என்பவற்றின் பிரகாரம் அஞ்சல் திணைக்களத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கு, கணக்கிணக்கக் கூற்று, இங்கு (அ) முதல் (இ) வரையிலான பொது அவதானிப்புகள், கீழே 2:4 முதல் 2:10 வரையிலான பந்திகளில் குறிப்பிடப்படும் பிரதான கணக்காய்வுக் கண்டுபிடிப்புகள் நீங்கலாக திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளதென அவதானிக்கப்பட்டது.

(அ) ஏடுகளையும் பதிவேடுகளையும் பேணாமை

பின்வரும் அவதானிப்புரைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) திணைக்களம் கீழே குறிப்பிட்ட பதிவேடுகளைப் பேணாததுடன் சில பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாக்கப்பட்டும் பேணப்படவில்லை.

| பதிவேட்டு வகை | தொடர்புடைய பிரமாணம் |
| --- | --- |
| நிலையான சொத்துப் பதிவேடு | 1978 ஆம் ஆண்டின் 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |

வாகன சம்பவப் பதிவேட்டுப் புத்தகம் நி.பி 1645(அ)

(ii) முப்பத்தொரு வாகனங்களது நாளாந்த ஓட்ட அட்டவணைகளும் பொழிப்புகளும், பிரதேச அலவலகங்கள் பேணும் பொது வைப்புக் கணக்கு மீதிகளது காலப் பகுப்பாய்வு, பிரதேச அலுவலகங்களது வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் போன்ற தேவையான சான்றுகளைத் திணைக்களம் சமர்ப்பிக்கவில்லை.

(ii) மீளாய்வாண்டின்போது திணைக்களத்திற்கு வழங்கப்பட்ட 02 கணக்காய்வு ஐய வினாக்களுக்கும் முன்னைய ஆண்டுகளுக்கான 01 கணக்காய்வு ஐய வினாவிற்கும் 2013 ஜுலை 31 ஆந் திகதியிலும் பதில் வழங்கப்படவில்லை. அந்த ஐயவினாக்களுக்குரிய கணிப்பிடத்தக்க கொடுக்கல் வாங்கல்களது பெறுமதி ரூபா 46,344,231 ஆகும்.

(ஆ) பொது வைப்புக் கணக்கு

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(i) 2012 டிசெம்பர் 31 வரை ஊழியர் சேமலாப நிதிய வெளியீடுகளை விற்பனை செய்தமையால் சேகரிக்கப்பட்ட ரூபா 9,070,540 அரசிறையில் செலவு வைக்கப்படாது 6000-0-0-15-102 ஆம் இலக்க பொது வைப்புக் கணக்கிலிருந்தது.

(ii) 2012 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான 6000-0-0-35 ஆம் இலக்க பொது வைப்புக் கணக்கில் வைப்பு மீதியின் காலப் பகுப்பாய்வு கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

(இ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குதொடர்பான கணக்கிணக்கக்கூற்று

---

கீழே குறிப்பிடப்பட்ட அவதானிப்புரைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2012 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு விடய இலக்கம் 22101 எனும் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான கணக்கிணக்கக் கூற்றின் பிரகாரம் அத்தினத்தில் உள்ளவாறு நிலுவைகளது மீதி ரூபா 3,228,011 ஆக இருந்ததுடன் அந் நிலுவை மீதியை அறவிடுவதற்கு 2013 ஒக்டோபர் 11 ஆந் திகதியளவிலும் தவறியிருந்தது.

(ii) அசைவற்றிருக்கும் 62 நிலுவையாகவிருந்த கடன் நிலுவை மீதி ரூபா 1,802,850 ஆகும்.

(iii) தனிப்பட்ட மீதிகளைக் குறிக்கும் பதிவேட்டில் உள்ள கூட்டுத்தொகை கட்டுப்பாட்டுக் கணக்கு மீதிகளுடன் இணக்கஞ் செய்யப்படவில்லை. கட்டுப்பாட்டுக் கணக்கு மீதி ரூபா 232,612,735 ஆனதுடன் தனிப்பட்ட மீதிகளைக் குறிக்கும் பதிவேட்டின் மீதி ரூபா 232,610,711 ஆகும்.

## 2.4 நல்ல ஆளுகையும் கணக்களி தகைமையும்

### 2.4.1 கூட்டிணைந்த திட்டம்

சகல அமைச்சினதும் செயலாளர்கள் மாகாண சபைப் பிரதான செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனத் தலைவர்கள் என்பவர்களுக்கு முகவரியிடப்பட்ட 2010 மார்ச் 10 ஆந் திகதிய பீஎப்/ஆர்/2/2/3/5(4) ஆம் இலக்க பொது நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்திற்கமைய, 2010 ஆம் ஆண்டு தொடக்கம் அடுத்துவரும் 3 ஆண்டுகளுக்கான கூட்டிணைந்த திட்டம் ஆண்டின் ஆரம்பத்தில் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும். அத்திட்டம் 2012 திசெம்பர் 31 ஆந் திகதியளவிலும் தயாரிக்கப்படாதிருந்தது.

### 2.4.2 வருடாந்த செயற்திறன் அறிக்கை

மேற்படி 2.4.1 பந்தியில் குறிப்பிடப்பட்ட பொது நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தில் குறிப்பிடப்படும் 2002 செப்டம்பர் 12 மற்றும் 2004 பெப்ரவரி 20 ஆந் திகதிய முறையே 402 மற்றும் 402(1) பொது நிதிச் சுற்றறிக்கைகள் என்பவற்றின் பிரகாரம் நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் திணைக்களத்தால் தயாரிக்கப்பட வேண்டிய வருடாந்த செயற்திறன் அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கும் பிரதி ஒன்றுடன் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட வேண்டுமாயினும்,

மீளாய்வாண்டிற்கான செயற்திறன் அறிக்கை 2013 ஆகஸ்ட் 31 ஆந் திகதியளவிலும் பாராளுமன்றத்தில் முன் வைக்கப்படவில்லை.

### 2.4.3 வருடாந்தப் பொருட்கொள்வனவுத் திட்டம்

2012 ஆம் ஆண்டிற்காக திணைக்களம் கொள்வனவுத் திட்டம் ஒன்றைத் தயாரித்திருந்தது. எனினும், அதனைத் தயாரிப்பதற்கு அரசாங்க கொள்வனவு வழிகாட்டலின் 4.2.1(இ),(ஈ),(உ) என்னும் பந்திகளில் காணப்படும் ஏற்பாடுகள் பின்பற்றப்படவில்லை. கைநூலினது மாதிரிப்படிவங்களும் பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 2.5 சொத்து முகாமைத்துவம்

### (அ) பயன்படுத்தப்படாததும் குறைவாகப் பயன்படுத்தப்படுவதுமான சொத்துக்கள்

சேமலாப நிதிய உரித்துடையவர்களது மீதி மற்றும் ஏனைய விபரங்கள் என்பவற்றை உடனடியாகப் பெறுவதற்கு ரூபா 35,000 செலவிடப்பட்டு 2012 நவெம்பர் 23 ஆந் திகதியன்று கம்பஹா தொழில் அலுவலகத்திற்கு வழங்கப்பட்ட கிறிஸ்கோ இயந்திரம் பயன்படுத்தப்படாது ஏறக்குறைய 6 மாதமாக எதுவித பாதுகாப்புமின்றி அலுவலகத்தில் பயன்படுத்தப்படாதிருந்தது. அவ்வியந்திரத்தைப் பயன்படுத்துவதற்கான அறிவுறுத்துரைகளோ அல்லது இயந்திரப் பாவனை தொடர்பான அறிவு உள்ள உத்தியோகத்தர் ஒருவரின் சேவையோ வழங்கப்படாதிருப்பதும் அவதானிக்கப்பட்டது.

### (ஆ) வருடாந்தப் பொருட் கணிப்புச் சபையை நடாத்துதல்

நிதிப் பிரமாணம் 1647 (ஆ) க்கமைய வாகனங்களும் அவற்றின் உபகரணங்களும் தொடர்பாகக் கணிப்பீடு மேற்கொள்ளப்பட்டு அக் கணிப்பீட்டு அறிக்கை நிதிப்பிரமாணம் 757(2) க்கமைய கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமாயினும், திணைக்களத்துக்குரிய 80 வாகனங்கள் சம்பந்தமாக கணிப்பீட்டு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படவில்லை.

## 2.6 இணங்காமை

### (அ) சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

கணக்காய்வுத் தெரிவுச் செவ்வைகளின்போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (i) பொது நிர்வாகச் சுற்றறிக்கை<br>1992 ஆகஸ்ட் 19 ஆந் திகதிய 26/92 ஆம் இலக்கம் மற்றும் 1990 ஒக்டோபர் 11 ஆந் திகதிய 41/90 ஆம் இலக்கச் சுற்றறிக்கைகள் | அவிசாவளை தொழில் அலுவலகத்தில் வாகனக் குழாமிலுள்ள PB-8834 இலக்க வாகனத்தில் அரச இலச்சினை பொறிக்கப்படாததும் அதன் எரிபொருளும் சமப்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| (ii) ஏனைய சுற்றறிக்கைகள்<br>2007 ஒக்டோபர் 31 ஆந் திகதிய 15/2007 ஆம் இலக்கத் தொழில் திணைக்களச் சுற்றறிக்கை<br>(அ) 01 ஆந் பந்தி | (i) தொழில் உத்தியொகத்தர்கள் ஒருமாதத்தில் குறைந்தது 20 பரிசீலனைகளை அவ்வப்போது மேற்கொள்ள வேண்டுமாயினும், அவிசாவளை தொழில் திணைக்களத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய 20 பரிசீலனைகளை விட குறைவாகவிருந்த 36 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.<br>(ii) கம்பஹா மாவட்ட தொழில் அலுவலகத்தின் தொழில் உத்தியோகத்தர்கள் ஒரு மாதத்தின் |

போது மேற்கொள்ளவேண்டிய குறைந்தளவு பரிசீலனையை மேற்கொள்ள வேண்டிய குறைந்தளவு பரிசீலனையை மேற்கொள்ளாத 106 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(ஆ) 5.01 ஆம் பந்தி

(i) அடுத்துவரும் மாதத்தின் 10 ஆந் திகதிக்கு முன்னர் தொழில் உத்தியோகத்தர்கள் தமது மாதாந்த தினப்பதிலுபுத்தகங்ககளை உதவித் தொழில் ஆணையாளரிடம் சமர்ப்பிக்க வேண்டுமாயினும், அவிசாவளை தொழில் அலுவலகத்தில் 61 சந்தர்ப்பங்களில் தினப்பதிவு புத்தகங்களைச் சமர்ப்பிதில் தாமதம் அவதானிக்கப்பட்டதுடன் தாமதக் காலம் 2 முதல் 52 நாட்களாகவும் இருந்தது.

(ii) கம்பஹா தொழில் உத்தியோகத்தர்களின் மாதாந்த தினப்பதிவு புத்தகங்கள் 49 சந்தர்ப்பங்களில் தாமதமாகப் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

(இ) 3.1 ஆம் பந்தி

(i) அவிசாவளை மாவட்ட தொழில் அலுவலகத்தின் தொழில் உத்தியோகத்தர்கள் 66 சந்தர்ப்பங்களில் அவதானிக்கப்பட்டது. தாமதத்திற்கான காரணத்தை உதவி தொழில் ஆணையாளருக்கு அறிவிக்க வில்லை.

(ii) கம்பஹா தொழில் உத்தியொகத்தர்கள் (2012 மற்றும் 2013 முதல் 3 மாதங்களுக்கு) 1943 சந்தர்ப்பங்களில் தாமதமாகப் பரிசீலனை

அறிக்கைகளைச் சமர்ப்பித்திருந்தமை அவதானிக்கப்பட்டது.

**2.7 செயற்திறன்**

2012 செயல் நடவடிக்கைத் திட்டம் மற்றும் முன்னேற்ற அறிக்கைகளின் பிரகாரம் திணைக்களத்தின் முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புரைகள் கீழே தரப்படுகின்றன.

(அ) போதியளவு நிறைவேற்றப்பட்டிருக்காத பணிகள்

தொழில் திணைக்களத்தின் 2012 வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தின் இலக்கை முற்றாக அடைய முடியாத 8 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. அதற்கென ஒதுக்கப்பட்ட நிதி ரூபா 1.172 மில்லியனாகும். வேறு 6 பணிகளும் நிறைவேறுவதில் 40 முதல் 60 சதவீத நலிவு நிலவியது.

(ஆ) வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்திற்கு அமைவாகச் செயற்பட்டிராமை

கீழே குறிப்பிடப்பட்ட சந்தர்ப்பங்களில் செயல் நடவடிக்கைத் திட்டத்திற்கு அமைவாக செயற்படவில்லை.

(i) ஏறக்குறைய கடந்த 6 ஆண்டு காலத்தின்போது அவிசாவளை தொழில் திணைக்களத்தின் தொழில் உத்தியோகத்தர்கள் 558 நிறுவனங்களைப் பரிசீலிக்காது போனமை அவதானிக்கப்பட்டது. அந் நிறுவனங்களிலிருந்துடன் அறவிடப்பட வேண்டிய ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் பணிக்கொடை தொடர்பாக எதுவித தகவல்களும் இலங்கை மத்திய வங்கிக்கு அறிவிக்கப்படவில்லை.

(ii) கம்பஹா தொழில் அலுவலகத்தின் 2012 ஆம் ஆண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டம் எய்தப் பெறாமைக்குப் பின்வருவன காரணமாயிற்று என அவதானிக்கப்பட்டது.

| இலக்கு | செயற்பாடு | இலக்கு | 2012 ஆம் ஆண்டு<br>இலக்கை எய்தாமை |
|---|---|---|---|
| நிறுவனத்தின் நாளதுவரையாக்கப்பட்ட பட்டியலைப் பேணுதல் | முற்றாகப் பூர்த்தி செய்தல் | 100 சமவீதம் | பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. |
| தொழிலாளர் பரிசீலனை நடைமுறைகளின் பிரமாணம் | நிறுவனங்களைப் பரிசீலித்தல் | 2,400 | 722 |
| பொதுச் சான்றுப் பதிவேட்டின் பிரகாரம் 2011 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலுவை மீதியை அறவிடுதல் | ஊழியர் சேமலாபமும் ஏனையவையும் | ரூபா 100 மில்லியன் | 71 சதவீத்தை அறவிடப்பட்டிருக்க வில்லை. |
| நீதிமன்ற வழக்கு வினைத்திறனுடன் பூர்த்தி செய்தல் | (i) 2011 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலவிய பிடி ஆணைகள் தொடர்பாக நடவடிக்கை எடுத்தல் | 40 | 35 சதவீதம் செயற்படவில்லை. |
| | (ii) 2011 இல் செயலற்றிருந்த வழக்குகள் தொடர்பாக நடவடிக்கை எடுத்தல் | 226 | |

(iii) கம்பஹா மாவட்ட தொழில் அலுவலகத்தின் அதிகாரத்திக்குட்பட்ட பிரதேசத்தில் 100 ஊழியர்களுக்கு அதிகமாக உள்ள 52 நிறுவனங்கள் 6 முதல் 8 ஆண்டுகளாகத் தொழில் உத்தியோகத்தர்களால் பரிசீலனைக்கு உட்படுத்தப்படவில்லை. சில நிறுவனங்கள் 2008 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளிலேயே இறுதியாகப் பரிசீலிக்கப்பட்டிருந்தன.

(iv) அவிசாவளை தொழில் அலுவலகத்தில் 2010 ஆம் ஆண்டு முதல் 2012 ஆம் ஆண்டு வரையான 3 ஆண்டுகளாக ஊழியர் சேமலாப நிதியம், பணிக்கொடை மற்றும் சம்பள நிலுவைக் கொடுப்பனவு என்பன பரிசீலிக்கப்படுகையில் 60 நிறுவனங்கள் குறித்த ரூபா 26,186,411 கொடுப்பனவுகளைப் புறக்கணித்திருந்தன என்று அவதானிக்கப்பட்டது. இந்நிறுவனங்களுக்கெதிராக வழக்குத்தொடர நடவடிக்கை எடுக்கப்பட வில்லை.

(v) கம்பஹா மாவட்ட தொழில் அலுவலகத்தில் 2009 முதல் 2013 ஜனவரி வரையிலான காலப்பகுதியின்போது ஊழியர் சேமலாப நிதியம், பணிக்கொடை மற்றும் சம்பள நிலுவைக் கொடுப்பனவு என்பவற்றைப் பரிசீலித்தபோது 47 நிறுவனங்கள் ரூபா 5,749,246 கொடுப்பனவுகளைப் புறக்கனித்திருந்தமை புலனாகியதுடன் அந் நிறுவனங்களுக்கு எச்சரிக்கை அறிவித்தல் அனுப்பவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. 103 நிறுவனங்கள் குறித்த ரூபா 57,552,366 கொடுப்பனவுகளைப் புறக்கனித்திருந்ததுடன் எச்சரிக்கை அறிவித்தல் அனுப்பப்படுவதற்கான நடவடிக்கையும் எடுக்கப்படாதிருந்தது. 159 நிறுவனங்கள் குறித்த ரூபா 57,552,366 கொடுப்பனவைப் புறக்கனித்திருந்ததுடன் எச்சரிக்கை அறிவித்தல் அனுப்பப்படுவதற்கான நடவடிக்கையும் எடுக்கப்படாதிருந்தது. 159 நிறுவனங்கள் குறித்த ரூபா 83,763,822 கொடுப்பனவுகளைப் புறக்கனித்திருந்தன. இந் நிறுவனங்களுக்கெதிராக வழக்குத் தொடர நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.8 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

திணைக்களம் ஈடுபட்ட சில கொடுக்கல் வாங்கல்கள் முறையற்றவாறிருந்தன. அவ்வாறாக அவதானிக்கப்பட்ட சில சந்தர்ப்பங்கள் கீழே காணப்படுகின்றன.

(i) நீதிமன்றத்தின் ஊடாக நிறுவனங்களுக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டு ஊழியர்களுக்குக் கொடுப்பனவு செய்யவேண்டிய ரூபா 5,902,452 குறித்த நிறுவனங்களிடமிருந்து அறவிடப்பட்டு கம்பஹா மாவட்ட தொழில் அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்ததுடன் அத்தொகையைக் குறித்த உரித்துடையவர்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாததுடன் 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழைய மீதிகளும் இவற்றுள் அடங்கியிருந்தன. நிதிப்

பிரமாணம் 571 க்கமைய காலங்கடந்த அவ்வைப்புகள் தொடர்பாகவும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ii) கம்பஹா தொழில் அலுவலகத்தின் வாகனக் குழாமினது 52-4396 இலக்க வாகனம் தொடர்பாக நிதிப் பிரமாணம் 1640 ஆ,இ ஆகிய பந்திகளுக்கு முரணாக 2013 ஜனவரி – மார்ச் காலப்பகுதியின்போது 42 சந்தர்ப்பங்களில் 2,067 கி.மி தூரம் வாகனத்தில் பயணஞ் செய்த உத்தியோகத்தர் ஒருவர் கையொப்பமிடாதிருந்ததுடன் ஓட்ட அட்டவணையில் எரிபொருள் தவறாக கணக்கிணக்கஞ் செய்யப்படுவதும் அவதானிக்கப்பட்டது. எரிபொருள் கணக்கிணக்கஞ் செய்யப்படுகையில் ஒரு லீட்டருக்கு 8 கி.மீ என சீராக்கல் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டபோதும், அவ்வாறு செய்யப்படுகையில் ஏற்பட்ட மிகையும் குறைவும் சீராக்கல் செய்யப்பட்ட விதம் மற்றும் அதன் பெறுமதி யாது என்று குறிப்பிடப்படவில்லை.

**2.9 முகாமைத்துவ நலிவுகள்**

கணக்காய்வு தெரிவுச் செவ்வைகளின்போது பின்வரும் நலிவுகள் அவதானிக்கப்பட்டன.

(i) 2009 ஏப்ரல் 16 ஆந் திகதிய 9/2009 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை மற்றும் 2012 ஜுலை 11 ஆந் திகதிய ஏ/11/24/01 ஆம் இலக்க தொழில் ஆணையாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம், தொழில் அலுவலகங்களில் வருகை தருதல், செல்லுதல் என்பவற்றைக் குறிப்பதற்கு கைவிரல் அடையாள இயந்திரம் பயன்படுத்தப்படுவது கட்டாயமான தேவை எனக் குறிப்பிடப்பட்டபோதும், அவிசாவளை மற்றும் கம்பஹா தொழில் அலுலகங்களில் கைவிரல் அடையாள இயந்திரங்கள் பழுதடைந்து ஏற்குறைய 2 ஆண்டுகளாகியும் அவற்றைப் பழுதுபார்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வில்லை.

(ii) எதிர்த் தரப்பினர் வருகை தாராததாலும் வதிவிட மாற்றம் போன்ற காரணங்களால் ரூபா 1,560,619 அறவீட்டிற்கு, நிறுவனங்களுக்கு எதிராக வழக்குகளில் பிடி ஆணைபிறப்பிக்கப்பட்டிருந்தது. எனினும், அவிசாவளை தொழில் அலுவலகம் அது சம்பந்தமாகப் பொருத்தமான நடவடிக்கைகளை 3 முதல் 7 ஆண்டுகளாக மேற்கொள்ளவில்லை.

(iii) நீதிமன்றங்களில் வழக்குகள் தொடரப்பட்டிருந்தாலும் செயலற்றிருந்த 45 வழக்குகளின் மூலம் ரூபா 16,980,115 அறவிடப்பட வேண்டியவை தொடர்பாக நடவடிக்கை எடுத்து, குறித்த நலன்பெறு நர்களுக்கு அதனைப் பெற்றுத்தர கம்பஹா மாவட்ட தொழில் அலுவலகத்தால் இதுவரை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.

(iv) ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் பணிக்கொடை மற்றும் சம்பள நிலுவை என்பவற்றை அறவிடுவதற்கு பல்வேறு நிறுவனங்களுக்கு எதிராக வழக்குத் தொடர்ந்து எதிர்த்தரப்பினர் வருகை தராமை, வதிவிட மாற்றம் போன்ற காரணங்களால் பிடி ஆணை பிறப்பிக்கப்பட்ட 14 வழக்குகள் தொடர்பாக ரூபா 842,586 அறவிடப்படவேண்டியிருந்தமை தொடர்பாகப் பொருத்தமான நடவடிக்கைகளை கம்பஹா மாவட்ட அலுவலகம் மேற்கொள்ளவில்லை.

### 2.10 மனித வள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை**

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தொழில் திணைக்கள ஊழியர் எண்ணிக்கை விபரம் வருமாறு.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிட எண்ணிக்கை | மிகையாகவுள்ள எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேட்ட நிலை | 205 | 136 | 69 | - |
| (ii) | மூன்றாம் நிலை மட்டம் | 667 | 441 | 226 | - |
| (iii) | இரண்டாம் நிலை மட்டம் | 1,487 | 1,236 | 251 | - |
| (iv) | ஆரம்ப மட்டம் | 442 | 406 | 36 | - |
| (v) | ஏனைய (அமைய/தற்காலிக/ ஒப்பந்த அடிப்படை) | - | 26 | - | 26 |
| | மொத்தம் | 2801 | 2245 | 582 | 26 |

பின்வரும் அவதானிப்புரைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மீளாய்வாண்டு முடிவிலான 582 வெற்றிடங்களை நிரப்ப முடியாது போயிற்று.

(ii) வேலையில் சேர்த்துக் கொள்ளப்பட்ட 26 மிகையான ஊழியர்கள் தொடர்பாக முறையான அங்கீகாரத்தைப் பெறமுடியாது போயிற்று.